செ.வெ.எண்:211 நாள்: 27.03.2018

திருநெல்வேலி பாளை காந்தியம்மாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி இணை ஆணையர், திருநெல்வேலி அலுவலகத்தின் தூய்மை பாரத இயக்க திட்ட நிதி ரூ.2.00 லட்ச மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட கழிப்பறையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் திறந்து வைத்தார்.

------

திருநெல்வேலி பாளை காந்தியம்மாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி இணை ஆணையர் திருநெல்வேலி, அலுவலகத்தின் தூய்மை பாரத இயக்க திட்ட நிதியில் புதுப்பிக்கப்பட்ட கழிப்பறை திறப்பு நிகழ்ச்சி மத்திய சரக்கு மற்றும் சேவை வரி அலுவலக இணை ஆணையர் திரு.என்.நரேஷ்,இ.வ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.03.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு ரூ.2 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட கழிப்பறையை திறந்து வைத்தார்.

காந்தியம்மாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஏற்கனவே இருந்த கழிப்பறை சிதிலமடைந்து தண்ணீர் வசதியின்றி, சுகாதாரமற்ற முறையில் இருந்தது. தற்போது இது ரூ.2 லட்சம் செலவில் தண்ணீர் வசதி, பக்கவாட்டி சுவர் மற்றும் தளங்களுக்கு டைல்ஸ் ஒட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சரக்கு மற்றும் சேவை வரி இணை ஆணையர் அலுவலக உதவி ஆணையர்கள் திரு.முத்துகுமார், திரு.கோபிநாத், பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.சிவகாம சுந்தரி மற்றும் ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.